IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 59 /2014
Deposition of witness for PW1

Name : மீராபாய் வேல்முருகன்

Father's Name : ஆறுமுகம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 24 day of November, 2021.

குறுக்கு விசாரணை

வழக்கு சொத்தை நான் சிவபிரகாசம் என்பரிடமிருந்து கிரையம் பெற்றேன். 1 முதல் 5 பிரதிவாதிகள் உள்ளூரில் பொறுப்பில் உள்ளவர்கள் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொது இடம் என்று என்னிடம் கூறினார்கள் என்றால் சரிதான். ஆனால், அது எனக்கு சொந்தமான சொத்தாகும். பிரதிவாதிகள் என்னை அணுகி பொது சொத்து என்று சொன்னபிறகு தான் நான் தாவா சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2014ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துவிட்டு 2015ம் ஆண்டு வரிசெலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 2011 முதல் 2019 வரை வரி செலுத்தியுள்ளேன். நான் 2015 மற்றும் 2019 ஆண்டிற்கான வரிரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.